பக்கங்கள்:10 விலை : 30/-

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 10 செவ்வாய்க்கிழமை 22.02.2022 கதிர் 109

### இனி இது ரகசியம் அல்ல!

1958இல் வெளிவந்த திரைப் படம் 'வஞ்சிக் கோட்டை வாலி பன்'. இந்தப் படத்தில் பத்மினி, வைஜந்திமாலா என்று கொடி கட்டிப் பறந்த இரண்டு பழம் பெரும் நடிகைகளும் ஒருவரை ஒருவர் கோபத்துடன் முறைத்துப் பார்த்து, நேருக்கு நேர் ☞2

# யாழில் இருந்து வானில் முல்லைத்தீவு சென்று வன்முறையில் ஈடுபட்ட 13 பேர் மடக்கிப் பிடிப்பு

## தாக்குதலில் 5 பேர் படுகாயம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவுக்கு வன்முறையில் ஈடுபடச் சென்ற பெண் உள்ளிட்ட 13 பேர் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:-

யாழ்ப்பாணம் - காங்கேசன்துறை வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் மினிவான் ஒன்றை வாடகைக்கு அமர்த்தி கீரிமலைப் பகுதியைச் சேர்ந்த பெண் உள்ளிட்ட 13 பேர் முல்லைத்தீவு - அளம்பில் பகுதிக்குச் சென்று வன்முறையில் ஈடுபட்டனர்.

குறித்த கும்பலின் தாக்குதலில் 5 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

வாகனம் ஒன்றில் வந்த கும்பல் தமது பகுதியில் தாக்குதலை மேற்கொண்டு 5 பேரைப் படுகாயங்களுக்கு உட்படுத்தி விட்டுதப்பிச்செல்வதை அறிந்த ஊரவர்கள் வானைத் துரத்திச் சுற்றிவளைத்து மடக்கிப் பிடித்தனர். ☞9

# ஜெனிவாவை இலக்குவைத்து இலங்கை மீது கறுப்புப்புள்ளி!

## இராஜாங்க அமைச்சர் ஹெரான் சேமசிங்க குற்றச்சாட்டு



கொழும்பு, பெப்ரவரி 22

ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தொடர் ஆரம்பமாகும் வேளையில், இலங்கையின் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் கறுப்புப் புள்ளியை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகள் இன்றளவிலும் தொடர்கின்றன என்று இராஜாங்க அமைச்சர் ஹெரான் சேமசிங்க தெரிவித்தார். ☞2

## பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்துக்கு எதிராக யாழில் நேற்றும் கையெழுத்துப் போராட்டம்



(எஸ்.நிதர்ஷன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றும் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

யாழ்., மருதனார்மடம் மற்றும் சுன்னாகம் பகுதிகளில் நேற்றுக் காலை இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்து ☞2

## மோ. சைக்கிள் - மாட்டு வண்டி விபத்தில் இளைஞர் மரணம்!



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., வட்டுக்கோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மோட்டார் சைக்கிள் - மாட்டு வண்டி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மூளாய் பகுதியைச் சேர்ந்த சின்னையா ☞2

## 16 ஆயிரத்தைக் கடந்தது கொரோனா உயிரிழப்பு

இலங்கையில் மேலும் 30 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் மரணித்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் இந்த மரணங்கள் உறுதிப்படுத்தப்பட்டுள் ளன என்று அரச தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்தவர்களில் 14 ஆண்களும், 5 பெண்களும் அடங்குகின்றனர் என்றும் ☞9

## நேற்றும் 1,206 பேருக்கு கொரோனாத் தொற்று

இலங்கையில் மேலும் 1,206 பேருக்கு நேற்று கொரோனா வைரஸ் தொற்று உறுதியாகியுள்ளது.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய நாட்டில் இது வரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 6 இலட்சத்து 38 ஆயிரத்து 43 ஆக அதிகரித்துள்ளது.

## இன்றும் மின்வெட்டு!

இலங்கை மின்சார சபையின் வேண்டுகோளுக்கிணங்க இன்றும் நாட்டில் மின்வெட்டு அமுல்படுத்தப்படவுள்ளது எனப் பொதுப் பயன்பாட்டுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டின் பல மின் ☞2

## சம்பள உயர்வை வலியுறுத்தி யாழில் முன்பள்ளி ஆசிரியர்கள் ஆர்ப்பாட்டம்



(எஸ்.நிதர்ஷன், இ.கலையமுதன்)

வடக்கு மாகாண முன்பள்ளி ஆசிரியர்கள் சம்பள உயர்வு கோரியும், நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும் யாழ்ப்பாணத்தில் நேற்று மாபெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாணம் ☞2



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நாட்டிய நளினங்களை வெளிப்படுத்தி போட்டிக்கு ஆடுவார்கள். அதைப் பார்த்து பி.எஸ்.வீரப்பா 'சபாஷ்! சரியான போட்டி!' – என்பார்.

முக்கால் நூற்றாண்டுகள் தாண்டியும் அது பேசப்படும் வசனமாகி விட்டது. 'சபாஷ்! சரியான போட்டி!' என்று நம்மவர்கள் பேசிக் கொண்டாலும் அந்தப் பேசப்படும் வசனத்தின் ஊற்றுக் கண் எது என்பதற்காக இந்தத் தகவல்.

சரி, 'சபாஷ்! சரியான போட்டி!' என்ற சொல்லாடலுக்கான அரசியல் விவகாரத்துக்குள் இனி நுழைவோம்.

ஆளும் தரப்பின் செல்வாக்கு மோசமாக விழுந்து வருவதை அடுத்து, தங்களைச் சுதாரித்துக் கொண்டு எழுவதற்காக மாகாணங்கள் தோறும் எழுச்சிக் கூட்டம் என்று அறிவித்தது ஆளும் தரப்பு.

அந்த வரிசையில் முதலாவது கூட்டம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் – கடந்த 9ஆம் திகதி – அநுராதபுரம் சல்காது மைதானத்தில் நடைபெற்றது.

நானூறுக்கும் அதிகமான பஸ்களில் ஆள்கள் கூட்டத்துக்கு ஏற்றி வரப்பட்டமை தொடர்பில் ஏற்கனவே இந்தப் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

கூட்டத்தைக் கண்டதும் ஆட்சியாளர்களுக்கு உஷார் பிய்த்துக் கொண்டு வந்து விட்டது.

"அடுத்த தேர்தலில் முடியுமானால் எங்களைத் தோற்கடித்துப் பாருங்கள்!" – என்று சவால் விட்டார் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ.

சவாலை ஏற்றுக் கொண்டது பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி. எந்தத் தேர்தலையாவது உடனே நடத்த முன்வாருங்கள், தோற்கடித்துக் காட்டுகிறோம் என எதிரணி, 'சபாஷ்!. சரியான போட்டி' என்ற மாதிரி பதில் சவால் விட்டதும் பிரதமரும் ஆளும் தரப்பினரும் அதற்குச் சரியான பதில் தராமல் பம்மிக் கொண்டனர்.

ஆனால், எதிரணியான ஐக்கிய மக்கள் சக்தி விடுவதாயில்லை.

ஆளும் தரப்பின் அநுராபுரம் கூட்டத்தையே ஒரு சவாலாக எடுத்துக் கொண்டு காய் நகர்த்துகின்றது.

மொட்டுக் கட்சி கூட்டம் நடத்திய அநுராதபுரம் சல்காது மைதானத்தில் – அதே இடத்தில் – அதிலும் விடப் பாரிய பொதுக் கூட்டம் ஒன்றை நடத்தித் தங்களின் புஜபல பராக்கிரமத்தைக் காட்டப்போவதாக ஐக்கிய மக்கள் சக்தி அறிவித்திருக்கின்றது. அந்தக் கட்சி உருவானதின் இரண்டாம் ஆண்டு நிறைவுக் கூட்டமாக அதுஅரங்கேறும்எனக்கூறப்படுகின்றது.

உண்மையில் சரியான போட்டிதான்!

ஆனால், மாகாணம் தோறும் எழுச்சிக் கூட்டம் என்ற மொட்டுத் தரப்பின் அறிவிப்பு, அநுராதபுரம் கூட்டத்துடன் அடங்கி விட்டது போல தெரிகின்றது. மற்றைய மாகாணங்களில் இந்தக் கூட்டங்களைத் தொடர்ந்து நடத்துவது தொடர்பான அசுமாத்தங்களை அத்தரப்பில் காணவில்லை.

வரவர ஆட்சித் தரப்புக்கு எதிரான மக்களின் சீற்றம் அதிகரித்து வருவதைக் கருத்துக் கணிப்புகள் உறுதிப்படுத்தி வருகின்றன.

விவசாயிகளின் உர விடயத்தில் ஆரம்பித்து, எதேச்சாதிகாரமாக – முட்டாள்தனமாக – தீர்க்க தரிசனமின்றி – ஆளும் தரப்பு எடுத்த தீர்மானங்கள், முடிவுகள், கொள்கைகளே இன்றைய மோசமான நிலைமைக்குக் காரணம் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ளத் தொடங்கி விட்டமையால், ஆளும் தரப்பு தன் செல்வாக்கை மீட்டெடுப்பது என்பது துர்லபம் தான். அதுவும் தினசரி 2 மணி நேர மின்வெட்டு மக்களின் எரிச்சலையும் சீற்றத்தையும் மிக மோசமாக்கி, அரசிலிருந்து மக்களை வெகுதொலைவுக்குக் கொண்டு செல்கின்றது.

மக்களுக்கு உரியதை சாதிக்க முடியாத வெறும் வாய்ப்பந்தல் வீரர்தாம் தமது ஜனாதிபதி என்ற எண்ணம் தென்னிலங்கை மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து வருகின்றது.

'இவர் யுத்தத்துக்குத்தான் சரி, அரசியலுக்கும், நாட்டை வழி நடத்துவதற்கும் இவர் பொருத்தமேயற்றவர்' – என்ற நிலைப்பாடு தென்னிலங்கை மக்கள் மனதில் ஆழமாகப் பதிந்து வருகின்றது என்கின்றார் என் தென்னிலங்கை ஊடக நண்பர் ஒருவர்.

"இது விடயத்தில் மக்கள் கருத்தை உருவாக்கும் பாரம்பரிய உரிமை – வாய்ப்பு – உங்களைப் போன்ற பத்திரிகையாளர்கள், அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் கைகளில் இருந்து பறிபோய் நீண்ட காலமாகி விட்டது. சமூக ஊடகங்கள்தான் இது விடயத்தில் அதிகம் தாக்கம் செலுத்துகின்றன – உங்களின் பாரம்பரிய ஊடகங்கள் அல்ல. அதனால் பாரம்பரிய ஊடகங்களைக் கையில் போட்டு திருகுதாளம் – நாடகம் – ஆடும் ராஜபக்ஷக்களின் கதி காலி" – என்றார் அவர்.

அவர் கூறுதில் உண்மை இருப்பது போலத்தான் எனக்குத் தோன்றுகின்றது.

– மின்னல் –

## இன்றும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உற்பத்தி நிலையங்களுக்குப் போதியளவு எரிபொருள் கிடைக்காமை காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப் பட்டுள்ளது என அதன் தலைவர் ஜனக ரத்நாயக்க தெரிவித்தார்.

அதன்படி, முன்னதாக வெளியிடப்பட்ட மின்வெட்டு அட்டவணைக்கமைய ஏ, பி, சி குழுக்களுக்குப் பிற்பகல் 4.30 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரையிலான காலப்பகுதியில் சுழற்சி முறையில் 2 மணித்தியால மின்வெட்டு அமல்படுத்தப்படவுள்ளது.

மேலும், ஏனைய குழுக்களுக்கு குறித்த காலப்பகுதியில் 3 மணித்தியாலம்மின்வெட்டுஅமுல்படுத்தப்படவுள்ளது.

## சம்பள உயர்வை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மாவட்ட அரச அதிபர் அலுவலகத்துக்கு முன்பாகவும், அதனைத் தொடர்ந்து வடக்குமாகாணஆளுநர்செயலகத்துக்கு முன்பாகவும் குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த 30 வருடங்களுக்கு மேலாகவும் அதற்கு உட்பட்ட காலப்பகுதியிலும் முன்பள்ளி ஆசிரியர்களாகக் கடமையாற்றியிருந்தவர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 6 ஆயிரம் ரூபா மாத்திரமே வழங்கப்படுகின்றது. இந்நிலையில், சம்பள உயர்வு அதிகரிக்கப்பட வேண்டும் எனக் கோரி குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் போராட்டத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் ஆதரவு வழங்கினர். போராட்டக்காரர்களின் இடத்துக்குத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன் ஆகிய இருவரும் வருகை வந்திருந்தனர்.

போராட்டத்தில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்களால் யாழ். மாவட்ட அரச அதிபரிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாண ஆளுநர் செயலகம் முன்பாகவும் முன்பள்ளி ஆசிரியர்கள் கோஷமிட்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடக்கு மாகாண ஆளுநர் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு வவுனியாவுக்குச் சென்றதன் காரணமாக அவரைச் சந்திக்க முடியாது எனப் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் தெரிவித்தனர் என்று ஆளுநர்அலுவலகத்துக்குச்சென்றமுன்பள்ளி ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்டார்.

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய கையெழுத்துப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான ச.சுகிர்தன், கே.சயந்தன் மற்றும் வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.சுகிர்தன், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன், வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் எஸ்.பிரகாஸ், உள் ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

## மோ.சைக்கிள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லோகேஸ்வரன் (வயது 32) என்பவரே உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணக் கல்லூரிக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்த குறித்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி நேற்றுமுன்தினம் இரவு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டைப் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## ஜெனிவாவை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சமூக ஊடகங்களைப் பயன்படுத்திப் போலித்தகவல்களைச் சமூகமயப்படுத்தும் நடவடிக்கை இன்னும் நிறுத்தப்படவில்லை. குறிப்பாக ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத் தொடர் நடைபெறும் காலப்பகுதியில், இலங்கையில் மனித உரிமை நிலைவரம் தொடர்பில் கறுப்புப் புள்ளியை ஏற்படுத்துவதற்குச் சில குழுக்கள் திட்டமிட்ட அடிப்படையில் செயற்பட்டு வருகின்றன.

வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரம் மீண்டெழுவதை அந்தக் குழுக்களால் சகித்துக்கொள்ள முடியவில்லை. இதனால் சமூகவலைத்தளங்களில் கடத்தல்கள் பற்றியும் ஏனைய விடயங்கள் பற்றியும் பதிவிடப்படுகின்றன. இவ்வாறான நடவடிக்கை தனிநபருக்கு இலாபமாக இருக்கலாம். ஆனால், இராஜதந்திர மட்டத்தில் அது நாட்டுக்குத் தாக்கமாகவே அமையும்.

எனவே, ஊடகங்களுக்கு ஒழுக்கக் கோவை இருப்பதுபோல் சமூக ஊடகங்களுக்கும்அவ்வாறானஒழுக்கக்கோவை அவசியம் – என்றார்.

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 02122509750212223382
Email: ejcitsltnet.lk.



# கோழிப் பண்ணைகளைக் கூட சரியாக தற்போதைய அரசால் நடத்தமுடியாது!

## அநுர சாட்டை

கொழும்பு, பெப். 22

தற்போதைய அரசாங்கத்தால் கோழிப் பண்ணையைக் கூட சரியாக நடத்த முடியாது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

புத்தளத்தில் நடைபெற்ற மாவட்ட மாநாட்டில் பேசிய அவர் –

ஈஸ்டர் தாக்குதலுக்குக் காரணமானவர்களைத் தண்டிக்க அரசாங்கம் தவறிவிட்டதாகக் குற்றம் சாட்டினார்.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் ஆகியோருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களத்தால் 855 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டன.

ஆனால் அவர்கள் இருவரும் தற்போது விடுவிக்கப்பட்டுள்ளனர் எனவும், அரசாங்கம் தோல்வியடைந்த நிலையில் மக்கள் நம்பிக்கையிழந்துள்ளனர் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

3 ஆண்டுகள் எவ்வித நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில் 6 வருடங்கள் கடந்தால் அது மறைக்கப்பட்டுவிடும் என்றும் அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டினார்.


# VACANCIES
# UNIVERSITY OF JAFFNA SRI LANKA

University of Jaffa will entertain applications from qualified persons for the under mentioned post up to **Monday, 28.02.2022.**

**Post of Temporary Research Assistant**
**"A.S.Thambiah Endowment for Research in Oncology – Faculty of Medicine, University of Jaffna"**

Salary scale Rs.49,860/- (Fixed) pm

Qualifications:-

1. Basic degree in the field of healthcare with Undergraduate research experience in health research.

I. A First or Second class (Upper Division) in a basic degree Examination in the relevant subject.
***OR***
II. A Second class (Lower Division) in a basic degree Examination in the relevant subject.
***OR***
III. An ordinary pass in the B.Sc Special Degree Examination in the relevant subject.
***OR***
IV. An ordinary pass in the B.Sc General Degree Examination with a recognized postgraduate qualification in the relevant subject

***Note : Having research experience in the field of oncology will be preferable.***

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms will be available in the Faculty **website *http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf.*** Application forms downloaded from the Faculty website should accompany with the paid Bank slip for the deposit of a sum of Rs.100/- credited to the Peoples Bank Account No: 162-1-001-6-0000880 **(Reference number should be mentioned: 970000090000387)** of Bursar, University of Jaffna.

Perfected applications shall be sent to the Senior Assistant Registrar/ Faculty of Medicine, University of Jaffna, Adiyapatham Road, Kokuvil, Jaffna. Applicants are requested send the scanned copies of all the documents to the email address: **fomvacancy@univ.jfn.ac.lk** on or before Friday, 18.02.2022.

Applicants from the University System/Government Departments/ Corporations and Statutory Boards should channel their applications through the Heads of respective Institutions, but may send an advance copy in the first instance. However, no such applicant will be considered for interview, if the application channeled through the Head of the Department is not received.

Illegible & incomplete applications, and applications received after the closing date will be rejected without intimation. Only short-listed applicants will be called for an interview.

**REGISTRAR**
**UNIVERSITY OF JAFFNA**
**SRI LANKA**
**21.02.2022**



# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -10 சந்தனமாதாகோவில் 2ம் ஒழுங்கையில் அமைந்த ஆதன இலக்கம் 36/3 ஆதனம் S.சோமசுந்தரம் என்ற பெயரில் எமது பதிவேட்டில் காணப்படுகின்றது.

இவ்வாதனத்தை இல 36 சந்தனமாதாகோவில் 2ம் ஒழுங்கை சுண்டிக்குளி யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த குருநாதன் கைம்பெண் சற்குணேஸ்வரி என்பவர் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 30.07.2021 திகதியிட்ட உறுதி இல 4402 பிரகடன உறுதி மூலம் "கூளாவடியும் சமரக்குஞ்சமும்" என்ற பெயர் கொண்ட நிலப்பரப்பு இரண்டு குளி மூன்று தசம் பூச்சியம் ஏழு (2 குளி 3.07) விஸ்தீரணம் கொண்ட ஆதனமானது எனது தகப்பனான சுப்பிரமணியம் சோமசுந்தரத்தின் நன்கொடை ஆதனம் என்றும் இதனை எனக்கு 1975ம் ஆண்டு நன்கொடையளித்து முறையாக எழுதப்பட்ட ஆதனம் என்றும் நாட்டில் ஏற்பட்ட போர்ச்சூழலின் போது இடப்பெயர்வின் போது உறுதிகள் தொலைவடைந்து விட்டன என்றும் அன்றில் இருந்து தனது கட்டுப்பாட்டில் இருப்பதாகவும் வெளிப்படுத்தியுள்ளார். இவ்வாதனத்தை பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 27.09.2021 திகதியிட்ட 4438 நன்கொடை உறுதி மூலம் தனது மகள் குருநாதன் நாமகள் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

**ஆதன விபரம்** :- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று அரியாலை மேற்கு இறை இது நல்லூர் பிரதேச செயலகம் பகுதியில் யாழ் மாநகராசபைக்குட்பட்ட J/93 கிராம சேவகர் பிரிவில் உள்ள 'கூளாவடியும் சமரக்குஞ்சமும்" நிலப்பரப்பு இரண்டு குளி மூன்று தசம் பூச்சியம் ஏழு (2 குளி 3.07) பழைய கட்டிடமும் கிணறும் இது உத்தரவு பெற்ற நில அளவையாளர் தேவரூபன் அவர்களால் 2021.05.01ம் திகதி 051ம் இலக்கத்தில் அளந்து வரையப்பட்ட நில அளவை படத்தில் lot 01 என காட்டப்பட்டுள்ளது. இந்நிலப்பரப்பு 2 குளி 3.07 ற்கும் எல்லைகள்.

**கிழக்கு:-** குருநாதன் நாமகளின் ஆதனம்
**வடக்கு:-** பாதை(தனியார்)
**மேற்கு:-** சந்தனமாதா கோவில் ஒழுங்கை
**தெற்கு:-** பாலசுந்தரம் உருத்திராந்தாவினதும் பாலசுந்தரம் தயானந்தாவினதும் ஆதனம்

தற்போது குருநாதன் மகள் நாமகள் என்பவர் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு முழுவதிற்கும் உரிமை கோருபவர் யாரவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது குருநாதன் மகள் நாமகள் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**விஸ்வலிங்கம் மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர்**
**மாநகரசபை**



## University of Jaffna
## Vacancy - Post of Temporary Demonstrator - Faculty of Medicine

Applications are entertained from those who have passed the final examination of the MBBS or BSc degrees obtained in Allied Health Sciences or Biomedical Sciences from the State Universities or UGC recognized foreign Universities. *(Priority will be given to the MBBS graduates. Research experience in the relevant field is preferable)*

Salary Scale :Rs 40,920.00 (Fixed)

Interested candidates with the required qualifications are requested to send scanned copies of relevant certificates along with their duly filled applications in the prescribed application format.

Application forms and other details are available in the Faculty of Medicine website: **http://www.med.jfn.ac.lk/wp-content/uploads/2021/01/APPLICATION-Form.pdf**

Applications with scanned copies of all the documents should be sent **on or before Monday, 28.02.2022** to the following email address: **fomvacancy@univ.jfn.ac.lk**

Prescribed application form downloaded from the website must accompany paid bank-slip for the deposit of a sum of Rs.100.00 credited to the people's Bank Account No (Ref No): 970000090000387 in favor of Bursar, University of Jaffna.

The date of the selection interview for the above post will be notified to the eligible applicants via email.

Registrar
University of Jaffna
21.02.2022

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## நீதி தேடும் பேராயர்

பொறுப்புக் கூறல் விவகாரத்தில் இலங்கை அரசுகளிலும், அந்த அரசுகளின் சட்டமா அதிபரிலும், சட்டமா அதிபர் திணைக்களத்திலும் தமக்கு நம்பிக்கையே இல்லை என்று வெளிப்படையாக – பட்டவர்த்தனமாக – அறிவித்திருக்கின்றார் கொழும்புப் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை.

இதுவரை காலமும் ஈஸ்டர் ஞாயிறு தொடர்குண்டுத் தாக்குதலினால் பாதிக்கப்பட்டோர் விடயத்தை ஒட்டி இத்தகைய கருத்தை வெளியிட்டு வந்த பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித், இப்போது அதற்கு அப்பாலும் சென்று, இவ்விடயத்தில் ஆட்சிப் பீடம் மீதும் பொறுப்புக் கூறலில் நம்பிக்கையே இல்லை என்று கூற முற்பட்டிருக்கின்றமைதான் புதிய திருப்பம்.

“ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் குறித்து மட்டும் நான் இந்த அதிருப்தியைத் தெரிவிக்கவில்லை. எல்லா இனத்தவர்களுக்காகவும் நான் இதனைக் கூறுகின்றேன். இந்த ஆட்சியாளர்கள் மீதோ, சட்டமா அதிபர் மீதோ எனக்கு நம்பிக்கையில்லை. அவர்கள் விடயங்களை மறைக்கின்றார்கள். விடயங்களுக்குப் பொறுப்பான சில அரசியல் தலைவர்கள், புலனாய்வு மற்றும் பொலிஸ் அதிகாரிகளைக் காப்பாற்றும் எத்தனமாக அரசு நடந்து கொள்கின்றது.” – என்று நேரடியாகக் குற்றம் சாட்டுகின்றார் பேராயர்.

“நாடு சுதந்திரம் பெற்ற வேளையில் இருந்து இப்போதைய இந்தக் கேடு கெட்ட நிலைமைக்கு நீதிமுறை தடம்புரண்டு போனமைக்கு நாம் எல்லோருமே பொறுப்பேற்க வேண்டும். இந்த முறைமையை நாம் மாற்ற வேண்டும். மாற்றத் தவறுவோமேயானால் நிலைமை இன்னும் மோசமடையும். மக்களே பெரிதும் பாதிப்படைவர்.” – என்றும் அவர் விசனத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

வண.லால் புஷ்பதேவ பெர்னாண்டோ (மக்ஸிமஸ் லின்டன் பெர்னாண்டோவின் உதவியுடன்), கலாநிதி சச்சித மெண்டிஸ், அஜித் மெண்டிஸ் ஆகியோரால் தொகுக்கப்பட்ட ‘தித்த’ (முற்றுப்புள்ளி) என்ற நூலை பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தின் ஜெஸ்மின் அரங்கில் கடந்த சனியன்று வெளியிட்டு வைக்கும் நிகழ்விலேயே இப்படி வெளிப்படையாக குற்றச்சாட்டுகளை அடுக்கினார் பேராயர்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்திய நீதியரசர் விஜித் மல்லகொட குழுவின் அறிக்கை, நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் அறிக்கை, பாதுகாப்புத் தொடர்பான நாடாளுமன்ற மேற்பார்வைக் குழுவின் அறிக்கை, ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை, மேற்படி கடைசி இரண்டு அறிக்கைகள் தொடர்பில் ஆராய அமைக்கப்பட்ட அமைச்சரவை உப குழுவின் அறிக்கை என ஐந்து அறிக்கைகளை ஆராய்ந்து 448 பக்கத்தில் சிங்களத்தில் இந்த ‘தித்த’ நூல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கைகளில் கூட தேவாலயத் தரப்புக் கோரிய பல விடயங்களை வழங்காமல் அரசும், சட்டமா அதிபர் திணைக்களமும் மறைத்து விட்டன என்றும் போராயர் குற்றம் சுமத்தியிருக்கின்றமை கவனிக்கத்தக்கது.

இன ரீதியான பார்வை கொண்ட விடயங்களில் இலங்கை அரசு, சட்டமா அதிபர் திணைக்களம், நீதித்துறை போன்றவை எப்படிச் செயற்படும் என்பதற்கு பேராயர் மல்கம் ரஞ்சித் சான்று பகிர்கின்றார்.

இவ்விடயத்தில் சர்வதேச விசாரணைக்கு அவர் கோரும் காரணங்கள், யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள், யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள் போன்றவை தொடர்பான விசாரணை விடயங்களிலும் கனகச்சிதமாக அப்படியே பொருந்துவதை சர்வதேச சமூகம் கவனிக்க வேண்டும்.

தாம் விரும்பியோ, விரும்பாமலோ, இது விடயத்தில் தமிழினத்தின் ஒன்றுபட்ட கோரிக்கைக்கு பேராயரும் சேர்ந்து வலிமை சேர்க்கின்றார் என்பதுதான் இதில் பொதிந்துள்ள முக்கிய அம்சம்.

## முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பாக கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுப்பு



இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டங்கள் தொடர்பாகக் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை புத்தளம் - கொழும்பு முகத்திடலில் இடம்பெற்றது.

புத்தளத்தில் உள்ள மகளிர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், பெண்கள், யுவதிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இந்தக் கவனவீர்ப்பில் கலந்துகொண்டனர்.

தனியார் சட்டம் ( முஸ்லிம் திருமண, விவாகரத்து சட்டம்) எமது அடிப்படை உரிமை எனும் தொனிப்பொருளில் இந்த கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, ‘முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து தனியார் சட்டத்தால் ஆளப்பட வேண்டும்’, சிறுபான்மையினரின் மத சுதந்திரத்தை அழிக்காதே’, முஸ்லிம்களின் திருமணசட்டம் அடிப்படை உரிமை’ தனியார் சட்டத்தை நீக்குவது யாப்புக்கு முரண்பாடானது’ இது போன்ற மூன்று மொழிகளிலும் எழுதப்பட்ட சுலோகங்களை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டக்காரர்கள் அமைதியான முறையில் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இலங்கையில் முஸ்லிம் தனியார் சட்டம் மக்களின் நேசத்தை வென்ற தலைவர்களால் போராடிப்பெறப்பட்டதாகும் என ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர்.

இந்த சட்டங்களைப் பற்றியும் அவற்றை சட்டமாக்கிய தலைவர்கள் பற்றியும் இன்றும் உலகில் பேசிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சட்டங்களே இலங்கை பல மதங்களைக் கொண்ட மனிதர்கள் வாழும் பன்முககலாசாரநாடாக உலகில் பார்க்கப்படுகிறது.

இலங்கையில் இந்தச் சட்டத்தை முழுமையாக இல்லாமல் ஆக்க வேண்டும் என்று ஒரு தரப்பினரும், சில மாற்றங்களைச் செய்ய வேண்டும் என்று இன்னொரு தரப்பினரும் தெரிவித்து வருகின்றனர்.

அத்துடன், இதுதொடர்பில் ஒருசில அரசசார்பற்ற அமைப்புக்கள் ஒன்றிணைந்து, முஸ்லிம் தனியார் சட்டம் தொடர்பில் பிழையான கருத்துக்களை எடுத்துரைத்து அதனை முழுமையாக இல்லாமல் செய்ய வேண்டும் என்ற வகையில் ஜெனிவாவுக்கு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளனர்.

எனவே, முஸ்லிம் தனியார் சட்டத்தில் சில மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டுமே தவிர, அதனை முழுமையாக இல்லாமல் செய்வதற்கு ஒருபோதும் அனுமதிக்கக் கூடாது என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் குறிப்பிட்டனர்.

இதனையடுத்து, சர்வதேச மனித உரிமை இயக்கங்கள் அமைப்பின் இலங்கைக்கான ஊடக ஒருங்கிணைப்பாளர் மஹ்ரூப் முஹம்மது ரிஸ்வியிடம் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது

## 6 மாதங்களாக தேடப்பட்டு வந்த இளைஞன் யாழ்ப்பாணத்தில் கைது

வாள்வெட்டு வன்முறைகளில் ஈடுபட்டு 6 மாதங்கள் தலைமறைவாகியிருந்த இளைஞன் யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வுப் பிரி வினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொக்குவிலைச் சேர்ந்த 22 வயதுடையவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கோப்பாய், யாழ்ப்பாணம் பொலிஸ் பிரிவுகளில் இடம்பெற்ற 6 வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர் என சந்தேக நபர் 6 மாதங்களாகத் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில், பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

சந்தேகநபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

## கூரிய ஆயுதத்தினால் வெட்டி ஒருவர் கல்கிஸையில் கொலை

இருவருக்கு இடையில் ஏற்பட்ட தகராறில் நபர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.




கல்கிஸை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானை பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை இரவு இந்த கொலைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்தவர் மொரட்டுவை கல்தெமுல்ல பகுதியைச் சேர்ந்த 43 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

சடலம் தொடர்பாக நீதிவான் விசாரணை மற்றும் பிரேத பரிசோதனை இடம்பெற்றன.

கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அவர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்றுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபரைக் கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகளை கல்கிஸை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.



# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம் பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 076 306 8091

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





### FULL OPTION

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 288

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**727.பதின்மூன்றாம் திருத்தத்தை அமுல்படுத்தக் கோருமாறு பல அரசியல் தரப்புக்களுக்கு புலம்பெயரில் இருந்து சமர்ப்பணங்கள் தரப்பட்டு அதற்கு ஆதரவு திரட்டப்படுகின்றது. பேரம் பேசலுக்கான சந்தர்ப்பம் கண்ணுக்கு முன்னால் இருக்கும் போது பேரம் பேசாமல், நேர்மாறாக, தமிழினத்தை அழிக்க எத்தனிகின்ற தரப்பு விரும்பும் நிலைப்பாட்டையே கஜேந்திரகுமாரும் வலியுறுத்த விரும்புகிறார். அதேசமயம் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வருடாந்தக் கூட்டத்திற்காக முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் அவர் பரிவாரமும் யாழ்ப்பாணத்தில் வலம் வருகின்றனர். இவை எவற்றைக் குறிக்கின்றன?**

தமிழ் மக்களுக்காக வாழ்ந்தவர்கள் என்றில்லாமல், தமிழ் மக்களை வைத்து வாழ்ந்தவர்கள், இன்றும் அப்படியே வாழலாம் என்று நினைப்பதைத் தெரிவிக்கிறது. இதில் மூன்று பிரிவினரைக் காட்டியிருக்கிறீர்கள். ஒவ்வொன்றாகப் பார்க்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி பதவிக்கு வந்து செய்த திருகுதாளங்கள் தமிழ் மக்கள் மட்டுமல்ல, நாடே அறியும். ஆனால் தான் கைதேர்ந்த அரசியல்வாதி, காலம் தன் பக்கம் வரும் என்று திடமாக நம்பி தமிழ் மக்கள் ஜனாதிபதி தேர்தலில் தனக்கு அளித்த ஆதரவை நினைவு கூர்கிறார் மைத்திரி. அவர் அரசாங்கத்தின் ஒரு பகுதி.அவர்களது பிழைகளைத் திருத்திச் சேர்ந்து பயணிப்போம் எனக் கூற முற்படுகின்றார்.



ஆகவே,அவர் 13 ஆம் திருத்தத்தையாவது நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கேட்பாரா, இல்லாவிடில் தங்கள் இருப்புக்காக 'ஒரு நாடு; ஒரே சட்டம்' என்ற கொள்கைக்கு ஒத்து ஊதக் கட்டுப்படுத்தப்படுவாரா? அவரோடு சேர்ந்து திரிபவர்கள் கூடி பிதற்றலன்றி எதுவும் செய்ய வழியற்றவர்கள். திருவிழாக்களின் பரிவாரங்களாகச் சுற்றலாம்.

கஜேந்திரகுமார் தாங்கள் இந்திய தேசிய நலன்களுக்கு எதிராக ஒருபோதும் துணைபோக மாட்டோம், தமிழ் மக்கள் தேசிய அங்கீகாரத்தைப் பெறாவிட்டால் தமிழினம் அழியும், அதனை அழிப்பதுதான் எதிரியின் நோக்கம், தேசத்தின் அங்கீகாரம் மட்டும்தான் தமிழ் இனத்தைக் காப்பாற்றும் என்கிறார். அவை யதார்த்தம்.

ஆனால் வழி என்ன? 13 ஆம் திருத்தத்தை அமுல் நடத்தக் கேட்பவர்கள் இந்தியாவின் அடிவருடிகள் என்றும் போராட்ட ஊர்வலம் நடத்தி, நடந்தவை இனப்படுகொலை என நிறுவப்பட்டு, அதில்வரும் பரிகாரத் தீர்வில் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தனிநாடு பெறவேண்டும் என்றவர், தாங்கள் பேரம் பேசலைப் பற்றிக் கூறும்போது தங்களைப் பார்த்து நக்கலடிக்கிறார்கள், இலங்கையின் தற்போதைய பொருளாதார நிலையில் அது பேரம் பேசலுக்கான உகந்த தருணம் என்றும் சொல்கிறார்.

தமிழ் மக்களின் எதிர்கால நலன்களை கருத்தில் கொள்பவரானால் அவர் மற்றத் தரப்புக்களுடன் சேர்ந்து அந்தப் பேரம் பேசலுக்கு உறுதுணையாக இயங்க வேண்டும். கூட்டமைப்பு 13 ஐ இடைக்காலத் தீர்வாகவும், சமஷ்டியைஜ் கைவிடாமலும் உறுதிப்படுத்தித்தான் சமர்ப்பணம் தந்துள்ளது. பேரம் பேசலில் சமஷ்டி ஆட்சி இன்றைய நிலையில் அமைய வேண்டும் என ஏற்கப்பட்டால் அது ஒற்றையாட்சியை மாற்றும்.

5 ஆகஸ்ட் 1988 அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி தமிழ் நாட்டில் நடந்த பொதுக் கூட்டத்தில் "விடுதலைப் புலிகளின் உறுதியற்ற நிலைப்பாடுகளினால் தமிழ் மக்கள் இதுவரை அதிகாரக் கையளிப்பினால் வரக்கூடிய நன்மைகளை அடையவில்லை. நாட்டின் மற்றைய மாகாணங்கள் அதனைப் பாவித்து கூடிய நிதி மற்றும் சட்டம் ஒழுங்கு என்பதில் பொலிஸ் அதிகாரங்களைக் கூட அமுல்படுத்துகிறார்கள். ஆனால் வட, கிழக்கு மாகாணங்கள் அதைச் செய்யவில்லை. விடுதலைப் புலிகள் முதலில் தங்களது நேர்மையை வெளிப்படுத்தினால்தான் நாங்கள் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்தி, போரை நிறுத்தி, பேச்சு வார்த்தைகளை முன்னெடுக்கலாம். அரசியல் தைரியமும் தார்மீக தைரியமும் இருக்க வேண்டிய



தருணம் இது. குண்டுகளுக்கும் தோட்டாவிற்குமான காலங்கள் அல்ல. விடுதலைப் புலிகள் அரசியல் தார்மீக தைரியங்களுடன் தேர்தலை சந்திக்க வேண்டும்" – எனத் தெரிவிக்க, அவரது அந்தக் கூற்று தமிழர் பிரச்சினைகள் பற்றியோ அவர்களது அபிலாஷைகளை ஒட்டியோ இருக்கும் உண்மையான அரசியல் நிலையை எதிர்கொள்ளும் அரசியல் தைரியமும் தார்மீக தைரியமும் அவருக்கு இல்லை என விடுதலைப் புலிகளாலும் அவரது ஆதரவாளர்களாலும் எள்ளி நகையாடப்பட்டது. சிங்கள பெரும்பான்மையினர் அதிகாரம் செய்யும் ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பரவலோ, அதிகார அளிப்போ ஒத்துவராது என்பது அவர்களது வாதம்.

அந்தக் கூற்று, பேரினவாதம் தொடர்ந்தும் நடத்தும் அட்டூழியங்களால் ஒற்றையாட்சிக்குள் அமையும் தீர்வு இனப்பிரச்சினையை தீர்க்காது என்பதற்கு இன்றும் பொருந்தி நிற்கிறது. நடத்தி முடிக்கப் பட்டவைகளால், அது எந்தப் பக்கத்தின் பிழையானாலும், தற்போதைய அரசமைப்புப்படி ஜனாதிபதியின் அதிகாரங்களின் கீழ் அவரது ஆளுநர் மூலமாகத் தரப்படும் எந்த அதிகார கையளிப்பும் நிலையானதல்ல என்பதை உணர்ந்து கொள்ளும் அரசியல் தைரியமும் தார்மீகத் தைரியமும் இந்திய அரசுக்கு இப்பொழுதாவது இருக்க வேண்டும். அதன் அடிப்படையில் ஸ்ரீலங்காவிற்கு அழுத்தங்கள் இருக்க வேண்டும்.




அப்படிப் பார்க்கும்போது எடுக்கப்படும், புலம்பெயராளர்களின் கோரிக்கைகள் அவற்றை 13 ஆம் திருத்தத்திற்குள்ளேயே அடக்கும் தோற்றத்தைத் தருகின்றன.

**728.புலம்பெயரில் இருந்து புறப்படும் கோரிக்கை என்ன?**

13 ஆம் திருத்த சட்டத்தின் அடிப்படையிலான மாகாண அதிகாரங்களின் தேவையைக் கோரும் நேர்மையானதும் உறுதியானதுமான குரலின் அவசியம் இன்று உணரப்படுகிறது என்ற அடிப்படையில் இலங்கையின் இனங்களுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட முரண்பாடுகளுக்கான அரசியல் தீர்வு முயற்சிகளில் அதிகார பகிர்வுக்கான தீர்வாக இலங்கை அரசியல் யாப்பினுள் உறுதிப்படுத்தப்பட்ட ஒரே வழிமுறையாக தற்போது இம் மாகாண சபைத் தீர்வே தமிழ் மக்கள் கையிலுள்ளது எனவும், அந்த அடிப்படையில் இலங்கையில் சிறுபான்மையினங்களை பிரதிநிதித்துவம் செய்யும் கட்சிகள் இம்மாகாண சபையின் சிறப்பான அம்சங்களை இதய சுத்தியுடன் வரவேற்று –

இப்பொறிமுறை எந்த வகையிலும் வலுவிழக்கச் செய்யப்படவோ அல்லது இல்லாமல் செய்யப்படவோ கூடாது என இலங்கை அரசையும் பிரதான எதிர்கட்சியையும் ஏனைய தேசிய கட்சிகளையும் நோக்கி அழுத்தமான கோரிக்கையை கூட்டாக முன்வைத்து –

அத்துடன் இந்த முறைமையை உயிர்ப்பித்து நடைமுறைப்படுத்த உடனடியாகத் தேர்தலை நடத்தி அவை சுதந்திரமாக இயங்க அனுமதிக்க பிரதான எதிர்க்கட்சிகளையும் கோருவதே சாலச் சிறந்ததாகும் என்று அந்த கோரிக்கை தெரிவிக்கின்றது.

அதற்குக் கூட்டாக குரல் கொடுக்கும்படி ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (டக்ளஸ் தேவானந்தா), இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (ஜீவன் தொண்டமான்), தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (சிவநேசதுரை சந்திரகாந்தன்),ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (அங்கஜன் இராமநாதன்), தேசிய தொழிலாளர் முன்னணி (பழனி திகாம்பரம்), தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி (வீ.ஆனந்தசங்கரி), தமிழர் சமூக ஜனநாயகக் கட்சி (சிறிதரன் திருநாவுக்கரசு), ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் (ரவூப் ஹக்கீம்), மேல் மாகாண மக்கள் முன்னணி (மனோ கணேசன்), அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ரிஷாத் பதியதீன்), மலையக மக்கள் முன்னணி (வே.இராதாகிருஷ்ணன்), தேசிய காங்கிரஸ் (ஏ.எல்.எம்.அதாவுல்லா), சமத்துவம் சமூக நீதிக்கான மக்கள் அமைப்பு (முருகேசு சந்திரகுமார்), தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி (விநாயகமூர்த்தி முரளிதரன்), புதிய ஜனநாயக மார்க்ஸிஸ்ட் லெனினிஸ்ட் கட்சி (சி.கா.செந்தில்வேல்), அகில இலங்கை தமிழர் மகா சபை (செங்கதிரோன்), முற்போக்கு தமிழர் அமைப்பு (சதாசிவம் வியாழேந்திரன்) போன்றவர்களுக்கு இந்தக் கோரிக்கை சமர்ப்பிக்கப்படுவதாகவும் அவர்களுக்கு அழுத்தங்கள் தரக்கூறிக் கேட்கப்படுகின்றது.

(வளரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# கச்சத்தீவு பெருந்திருவிழாவில் பங்கேற்பதற்கு இலங்கை, இந்தியப் பக்தர்களுக்கு அனுமதி

## வெளிவிவகார அமைச்சு அறிவிப்பு

கச்சத்தீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழாவில் இலங்கை மற்றும் இந்திய பக்தர்களும் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இரு நாட்டு பக்தர்களும் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக அந்த அமைச்சு தெரிவித்துள்ளது.

கச்சத்தீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் வருடாந்த திருவிழா எதிர்வரும் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

கொரோனா நிலைமையைக் கருத்திற்கொண்டு இலங்கை பக்தர்கள் 500 பேர் மாத்திரம் கச்சத்தீவு திருவிழாவில் கலந்துகொள்வதற்கான அனுமதியை வழங்குவதாக யாழ். மாவட்ட செயலகத்தில் கடந்த மாதம் 26 ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

எனினும் தமிழக பக்தர்களுக்கும் திருவிழாவில் பங்கேற்க அனுமதியளிக்குமாறு தமிழக அரசாங்கம் சார்பில் தொடர்ச்சியாக இலங்கை அரசாங்கத்திடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இந்த நிலையிலேயே இரு நாட்டு பக்தர்களும் கலந்துகொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

### மசகு எண்ணெயின் விலை உலக சந்தையில் எகிறல்!

உலக சந்தையில் மசகு எண்ணெயின் விலை நேற்று (திங்கட்கிழமை) மீண்டும் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, ப்ரெண்ட் ரக மசகு எண்ணெயின் பீப்பாய் ஒன்றின் விலை 1.34 அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது.

இதேவேளை அமெரிக்காவின் டபிள்யூடிஐ மசகு எண்ணெயின் பீப்பாய் ஒன்றின் விலை 1.61 அமெரிக்க டொலராக உயர்ந்துள்ளது.

# சிறந்த எதிர்காலச் சந்ததியினரை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்!

## பாதுகாப்பு செயலர் கோரிக்கை



தேசத்தைக் கட்டியெழுப்பும் செயற்பாட்டுக்காக அறிவார்ந்த மற்றும் கீழ்ப்படிதலுள்ள எதிர்கால மாணவர் சந்ததியை உருவாக்குவதில் ஆசிரியருக்கு அதிக பங்கு இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கமால் குணரத்ன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி கல்லூரி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள 'மாணவர், ஆசிரியர் மற்றும் போர்வீரர் நினைவிடம்' திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே பாதுகாப்பு செயலாளர் இதனைத் தெரிவித்தார். பயங்கரவாதத்தின் பிடியில் இருந்து நாட்டை விடுவித்து, தொந்தரவில்லாத அமைதியான சமூதாயத்தை அரசாங்கம் உருவாக்கியுள்ளது என கமால் குணரத்ன கூறினார்.

ஆகவே பதிலுக்கு, மாணவர்கள் அனைவரும் இந்த நாட்டுக்கும், அதன் மக்களுக்கும் மற்றும் எதிர்கால சந்ததியினரின் முன்னேற்றத்துக்கும் சேவை செய்வீர்கள் என நம்புகிறேன் எனவும் அவர் குறிப்பிட்டார்.

# இந்திய மீனவர்களுக்கு 10 ஆண்டுகள் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனை



இந்திய மீனவர்களுக்கு பருத்தித்துறை நீதிவான் நீதிமன்று 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைக்கப்பட்ட 3 ஆண்டு சிறைத்தண்டனை விதித்துள்ளது.

கடந்த 31ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பிற்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்த 21 இந்திய மீனவர்களை பருத்தித்துறை மீனவர்கள் சுற்றிவளைத்து பிடித்தனர்.

பருத்தித்துறை மீனவர்களிடம் இருந்து இந்திய மீனவர்களை மீட்ட கடற்படை அவர்களை கைது செய்து பருத்தித் துறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தினார்கள். 21 மீனவர்களையும் விளக்கமறியலில் தடுத்து வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று (திங்கட்கிழமை) விசாரணைக்கு எடுக்கப்பட்ட போது 21 மீனவர்களுக்கும் 3 ஆண்டுகளுக்கு சிறைத்தண்டனை விதித்த நீதிவான், அதனை 10 ஆண்டுகளுக்கு ஒத்திவைத்துள்ளார்.

# யாழ். பெரிய மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு மைத்திரி விஜயம்



யாழ்ப்பாணம்-பெரியமொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விஜயம் செய்தார்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன பல்வேறு நிகழ்வுகளில் கலந்து கொண்டிருந்தார்.

அந்த வகையில் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள பெரிய மொஹிதீன் ஜும்மா பள்ளிவாசலுக்கு சென்று பள்ளிவாசல் நிர்வாகத்தினருடன் கலந்துரையாடியமையுடன் முஸ்லிம் சமூகத்தின் பிரச்சினைகளையும் கேட்ட றிந்து கொண்டார்.

இந்தச் சந்திப்பில் தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பற்றிக், கைத்தறி துணிகள் மற்றும் உள்நாட்டு ஆடை உற்பத்தி இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர, சூரிய சக்தி, காற்று மற்றும் நீர்மின் உற்பத்தி கருத் திட்ட இராஜாங்க அமைச்சர் துமிந்த திசாநாயக்க, நாடாளுமன்ற குழுக்களின் பிரதித் தவிசாளர் அங்கஜன் இராமநாதன் உள்ளிட்டவர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# மிகப்பெரிய சீமெந்து தொழிற்சாலை நாட்டில் விரைவில் உருவாக்கப்படும்

இந்நாட்டின் மிகப் பெரிய சீமெந்து தொழிற்சாலை எதிர்வரும் மார்ச் மாதம் திறக் கப்படவுள்ளது.

இதன் ஊடாக நாட்டின் தற்போது காணப்படும் சீமெந்து நெருக்கடிக்குத் தீர்வு கிடைக்கக்கூடும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# டெங்கு வைரஸில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக எச்சரிக்கை!

டெங்கு வைரஸில் மாற்றம் ஏற்பட்டிருக்கலாம் என தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு சந்தேகம் வெளியிட்டுள்ளது.

தற்போது நோய் அறிகுறிகள் வெளிப்படுத்தப்படும் காலத்தில் மாற்றம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதன்காரணமாக 24 மணித்தியாலங்களுக்கு மேல் நோய் அறிகுறிகள் காணப்படுமாயின் வைத்தியரின் உதவியை நாடுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டில் 9 ஆயிரத்து 609 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 50 சதவீதமானோர் மேல் மாகாணத்தில் பதிவாகியுள்ளனர்.

# மின்சாரம் மற்றும் எரிபொருள் சிக்கனம் தொடர்பாக சுற்றுநிருபம்

அரச நிறுவனங்களில் மின்சாரம் மற்றும் எரிபொருளை சிக்கனமாக பயன்படுத்துவது தொடர்பான ஆலோசனைகள் அடங்கிய விசேட சுற்றுநிருபம் நேற்று (திங்கட்கிழமை) வெளியிடப்பட்டது.

இந்த விடயம் தொடர்பாக அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே.ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

இதன்போது, அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான வாகன பாவனை தொடர்பாகவும் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குளிரூட்டிகள் (ஏசி) மற்றும் தேவையற்ற விளக்குகள் பயன்பாட்டை முடிந்தவரை குறைக்குமாறு அரச நிறுவனங்களுக்கு ஏற்கனவே அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், அத்தியாவசியமற்ற பயணங்களுக்கு எரிபொருளை பயன்படுத்த வேண்டாம் என அரச நிறுவனங்களுக்கு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# தேசிய வளங்களை விற்பவர்கள் உண்மையான தேசபக்தர் அல்லர்!

## விஜித ஹேரத் எம்.பி. கருத்து

தேசபக்தர்கள் எனதங்களை பிரகடனப்படுத்துபவர்கள் நாட்டின் வளங்களை ஒருபோதும் விற்கமாட்டார்கள் என மக்கள் விடுதலை முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவித்த ஹேரத் மேலும் கூறுகையில் –

நாட்டின் பல வளங்கள் விற்கப்பட்டாலும் அல்லது இரு தரப்பு ஒப்பந்தங்கள் செய்து கொள்ளப்பட்டாலும் அத்தகைய ஒப்பந்தங்களை ஒரேயடியாக ரத்து செய்ய முடியாது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்தியாவிடம் ஒப்படைக்கப்பட்டதென்றும் அதன் பின்னர் கெரவலப்பிட்டி அனல்மின் நிலையத்தின் முழு உரிமையும் ஐந்தாண்டுகளுக்கு வழங்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் அம்பாந்தோட்டை துறைமுகம் சீனாவுக்கு 99 வருடங்களாக வழங்கப்பட்டதைச் சுட்டிக்காட்டிய அவர், இவை இலகுவில் மாற்றியமைக்க முடியாத ஒப்பந்தங்கள் என்றும் தெரிவித்துள்ளார்.

சொந்த தேசிய வளங்களை இலங்கை திரும்பப் பெற வேண்டுமானால், அவர்களுடன் பேச்சு நடத்த வேண்டும் என்றும் அத்தோடு நாடு எப்போதா




வது அதை திரும்பப் பெற விரும்பினால் இழப்பீடு கொடுக்க வேண்டும் என்றும் ஹேரத் கூறியுள்ளார்.

தேசிய வளங்களை சுதந்திரமாகப் பறிகொடுத்து விட்டு அவற்றைத் திரும்பப் பெறுவது எளிதல்ல என்றும் அதனால்தான், எதையும் விற்க வேண்டாம் என்றும் எங்களிடம் உள்ள குறைந்த வளங்களைச் சேமிக்க முயற்சிக்குமாறும் நாங்கள் அரசாங்கத்திடம் மிகவும் கேட்டுக்கொள்கிறோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இவை காப்பாற்றப்பட வேண்டும் என்றும் இதற்கு எதிராக மக்கள் திரள வேண்டும் என்றும் நாட்டின் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் எஞ்சியுள்ள தேசிய வளங்களைப் பாதுகாப்பது முக்கியம் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# மக்கள் எனக்கு வழங்கிய ஆணைக்கு செயல் வடிவில் நன்றி கூறி வருகிறேன்

## அங்கஜன் பெருமிதம்



கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மக்கள் எனக்கு வழங்கிய மிகப்பெரிய ஆணைக்கு செயல் வடிவில் நன்றி கூறி வருகிறேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

உடுப்பிட்டி தேர்தல் தொகுதியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் யாழ்.மாவட்ட மாநாட்டு நிகழ்வில் தலைமையுரை ஆற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு -

யாழ்.மக்கள் எமக்களித்த அன்புக்கும்-அரவணைப்பிற்கும் தலை வணங்கவே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இங்கு வந்துள்ளார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி குறிப்பிட்ட காலத்துக்குள் அபரிமிதமான வளர்ச்சி அடைந்துள்ளது.

அன்று எனக்கு ஜனாதிபதி தேசியப் பட்டியல் ஊடாக நாடாளுமன்றம் செல்ல ஒரு வாய்ப்பையும் அதனூடாக 5 மாத காலம் ஓர் அமைச்சுப் பதவியும் தந்து ஊக்குவித்தமை தான் இன்று நான் தொடர்ந்தும் மக்கள் பணியாற்றி வரப் பிரதான காரணம்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன யாழ். மாவட்டத்துக்கு 21 தடவைகள் விஜயம் மேற்கொண்டு யாழ். மக்களின் விவசாயம், காணி விடுவிப்பு, நல்லிணக்கம், இன ஒற்றுமை உள்ளிட்ட பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தார். அதுதான் இன்றும் சுதந்திரக் கட்சியை யாழில் வழிநடத்திச் செல்ல மிகப்பெரிய தூணாக விளங்குகிறது.

வரலாற்றில் முதல் தடவையாக யாழ். மக்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு ஓர் ஆசனத்தைத் தந்து மிகப்பெரிய ஆதரவைத் தந்துள்ளனர். இந்த மண்ணின் மகிமை உலகிற்கே தெரியும். அந்த மண் நான் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவாக மிகப்பெரிய வாய்ப்பைத் தந்துள்ளது.

எமக்கு எதிரானவர்கள் சொல்கின்றமை போன்று சுதந்திரக்கட்சி ஒரு சிங்களக் கட்சி அல்ல. இது ஒரு தேசியக் கட்சி. சர்வ இனங்கள், சர்வ மதங்களையும் ஒன்றுபடுத்திய கட்சி.

குறிப்பாக சிறுபான்மையினரின் தமிழர்களின் அபிலாஷைகளையும் உள்வாங்கிக் கொண்டு சுதந்திரக்கட்சி நிலைத்து நிற்கிறது. அதுவே கடந்த தேர்தலில் யாழ்.மக்கள் எனக்கு மிகப் பெரிய ஆணையை வழங்கக் காரணம்.

இந்த ஆணையை வழங்கிய மக்களுக்கு மிகப்பெரிய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளேன். அந்த நன்றியை 18 மாத காலமாக செயல் வடிவில் ஆற்றிய வருகிறேன்.

மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவராக, நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தவிசாளராக பல பரிணாமங்களைப் பெற்று 18 மாத காலத்துக்குள் யாழ். மாவட்டத்தில் 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்ட வீட்டுத்திட்டங்கள், கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த 793 நிறைவான கிராமம் வேலைத்திட்டங்கள், 16 சௌபாக்கியா உற்பத்திக் கிராம வேலைத்திட்டங்கள், 450 கிராமிய வீதிகள் புனரமைப்பு அதனை விட மாகாண சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை வீதிகள் என பல அபிவிருத்திகளை நிறைவு செய்துள்ளோம்.

அதையும் தாண்டி வாழ்வாதாரம் இன்று மிகப்பெரிய சவாலாக உள்ளது. இன்னமும் யாழ்.மாவட்டம் வறுமையில் எட்டாவது மாவட்டமாக உள்ளது. இந்த மாவட்டத்தை வறுமையில் இருந்து மீட்டெடுத்து பொருளாதார ரீதியாக முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும். அதனூடாக இழந்த அனைத்தையும் மீளப் பெற்று எமது இலக்கை அடைய முடியும். - என மேலும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

# பயங்கரவாதத் தடைச் சட்டம் காட்டுமிராண்டியான ஒரு சட்டம்

## கல்முனை மாநகர முதல்வர் காட்டம்

பயங்கரவாதச் சட்டம் உண்மையிலேயே ஒரு காட்டுமிராண்டியான சட்டமாகும்.மனித குலத்துக்குத் தேவையற்றதாகும் என கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை பகுதியில் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை நீக்கக் கோரி இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி துணைச் செயலாளர் அ.நிதான்சன் தலைமையில் இடம்பெற்ற கையெழுத்துப் போராட்டத்தில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தனது கருத்தில் தெரிவித்தவை வருமாறு -

இந்தக் கையெழுத்துப் போராட்டம் இலங்கையில் காணப்படும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை இல்லாமல் செய்வதற்காகவே ஆகும். 1979 ஆண்டு பயங்கரவாதத் சட்டம் இலங்கையில் உருவாக்கப்பட்டது.

அது உண்மையிலேயே ஒரு காட்டுமிராண்டியான சட்டமாகும். ஐக்கிய நாடுகள் சபையில் இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட மனித உரிமை பட்டயத்தில் கூறப்பட்ட அனைத்து விடயங்களுக்கும் எதிராகக் கூறப்பட்ட சட்டமாகும். மனித குலத்துக்குத் தேவையற்றதாகும்.

இயற்கை நீதி விதி கோட்பாட்டிற்கு எதிரான ஒரு சட்டம். இந்தச் சட்டத்தின் ஊடாக ஒருவர் கைது செய்யப்பட்டால் தன்னுடைய கருத்தைச் சொல்வதற்கு எந்த வாய்ப்பும் அவருக்குக் கிடையாது. - எனக் குறிப்பிட்டார்.



# பாதுகாப்புச் சட்டங்களை தயாரிப்பது சிங்கப்பூரின் நிபுணத்துவம் நாடல்!

தேசிய பாதுகாப்புத் தொடர்பான சட்டங்களை தயாரிப்பதில் சிங்கப்பூரின் நிபுணத்துவத்தை இலங்கை அரசாங்கம் நாடியுள்ளது.

தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான உள்ளூர் மற்றும் சர்வதேச அழுத்தத்துக்கு மத்தியில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உள்துறை அமைச்சர் கே.சண்முகத்தின் அழைப்பின் பேரில், நீதியமைச்சர் அலி சப்றியின் ஐந்து நாள்கள் சிங்கப்பூர் பயணத்தை அடுத்து நீதியமைச்சு வெளியிட்ட அறிக்கையிலேயே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் சட்டச் சூழலைப் பற்றிய புரிதலைப் பெற்றுக் கொள்ள சிங்கப்பூரிலிருந்து அதிகாரிகள் குழுவொன்றை இங்கு அனுப்புவது தொடர்பில் இரு அமைச்சர்களும் ஆராய்ந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் குற்றவியல் சட்டம், மத நல்லிணக்கச் சட்டம் மற்றும் சிங்கப்பூரின் உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டம் உள்ளிட்ட பல முக்கிய சட்டங்களில் சமீபத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள் பற்றிய விளக்கங்கள் இதன்போது நீதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு இந்த நீதிப்பின் போது இலங்கைக்கும் சிங் கப்பூருக்கும் இடையிலான ஒத்துழைப்பு தொடர்பில் விவாதம் இடம்பெற்றதாகவும் நீதி அமைச்சு தெரிவித்துள்ளது.

# தாதியர் சங்கத்தால் ஏற்பாடான எதிர்ப்பு பேரணி கைவிடப்பட்டது

அகில இலங்கை தாதியர் சங்கத்தினரால் நேற்று (திங்கட்கிழமை) கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த எதிர்ப்புப் பேரணி கைவிடப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் செயலாளருடன் இன்று பிற்பகல் கலந்துரையாடலொன்று இடம்பெறவுள்ள நிலையில், அதனைத்தொடர்ந்து பேரணியை முன்னெடுப்பது தொடர்பாக தீர்மானம் எடுக்கப்படும் என அந்தச் சங்கத்தின் செயலாளர் எஸ்.பி.மெதிவத்த தெரிவித்தார்.

தாதியர் கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து தாதியர்களுக்கான பட்டம் வழங்கப்பட வேண்டும் உள்ளிட்ட 7 கோரிக்கைகளை முன்வைத்து எதிர்ப்புப் பேரணி முன்னெடுக்கப்பட இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்.மாவட்ட செயலகம் முன்பாக முன்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்!

வடக்கு மாகாணத்தைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியர்கள் யாழ்ப்பாண மாவட்ட செயலகம் முன்பாக நேற்று (திங்கட்கிழமை) கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

தமக்கு வழங்கப்படும் 6 ஆயிரம் ரூபா கொடுப்பனவை அதிகரிக்கக் கோரியும், நிரந்தர நியமனம் வழங்கக் கோரியும், நீண்டக் காலமாகத் தாம் குறைந்த சம்பளத்துடன் சேவையாற்றி வருகின்றோம் எனவும் தமக்கு இந்த அரசாங்கம் உரிய தீர்வைப் பெற்றுத்தர வேண்டும் எனவும் கோரி இந்தப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் வருகை தந்து தமது ஆதரவைத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# இறுதிச் சமர்க்களத்தில் இறுதிவரை போராடிச் சாவடைந்தவரே பிரபாகரன்

## அவரின் மரணத்தை வைத்து சிலர் தொடர் அரசியல்; முன்னாள் இராணுவத் தளபதி பொன்சேகா பதிலடி



இறுதிப் போரில் பிரபாகரன் சரணடையவில்லை. அவரை இராணுவத்தினர் உயிருடன் பிடிக்கவும் இல்லை. இறுதிப் போர்க்களத்தில் அவர் இறுதி வரைப் போராடியே உயிரிழந்தார்.

-இவ்வாறு முன்னாள் இராணுவத்தளபதியும் ஐக்கிய மக்கள் சக்தியின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பீல்ட் மார்ஷல் சரத் பொன் சேகா தெரிவித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன், போரின் இறுதிக் கட்டத்தில் சரணடைந்த பின்னரே உயிரிழுந்தார் என்று யாழ்ப்பாணத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வொன்றில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார்.

இந்தக் கருத்துத் தொடர்பில் இறுதிப் போரில் இராணுவத் தளபதியாகப் பதவி வகித்த பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரபாகரனின் சாவை வைத்து அன்று தொடக்கம் இன்று வரை சிலர் அரசியல் செய்து வருகின்றனர். இராணுவத்தினருடனான நேரடி மோதலிலேயே பிரபாகரன் உயிரிழந்தார் என்பது உண்மை. அவரின் வெற்றுடலையே இராணுவத்தினர் மீட்டனர்.

பிரபாகரன் ஒரு பயங்கரவாதக் குழுவின் தலைவர். எனினும், அவர் சிறந்த போர் வீரன். அதனால் அவர் மீது எனக்குத் தனிமரியாதை உண்டு.

பிரபாகரனை உயிருடன் பிடிக்க வேண் டும் என இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் விரும்பின. அந்த நாடுகள் இலங்கை அரசுக்கு அன்று அழுத்தமும் கொடுத்திருந்தன. எனினும், பிரபாகரன் எந்தத் தரப்பிடமும் சிக்காமல் இறுதி வரைப் போராடியே சாவடைந்தார் - என்றார்.

## குடும்பஸ்தர் ஒருவர் வெட்டிப் படுகொலை

கொழும்பு, கல்கிசை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இரத்மலானைப் பிரதேசத்தில் இருவருக்கிடையில் ஏற்பட்ட மோதலில் ஒருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று கல்கிசைப் பொலிஸார் தெரிவித்தனர்.

கல்தேமுல்ல, மொரட்டுவை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே நேற்று முன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் உடனடியாக களுபோவில வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் அவர் சிகிச்சைபலனின்றி மரணமடைந்துள்ளார்.

பிரேத பரிசோதனைக்காக களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் சடலம் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் தொடர்புடைய நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில் அவரைக் கைது செய்வதற்கான நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வவுனியாவிலும் முன்பள்ளி ஆசிரியர்கள் போராட்டம்!

## வடக்கு ஆளுநரிடம் மகஜரும் கையளிப்பு

(வவுனியா நிருபர்)

சம்பளஅதிகரிப்புகோரிவவுனியாவில் முன்பள்ளி ஆசிரியர்கள் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தமையுடன், வடக்கு மாகாண ஆளுநரிடம் மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

வவுனியா, பூங்கா வீதியில் உள்ள ஆளு நரின் பிராந்திய அலுவலகம் முன்பாக நேற்று காலை குறித்த கவன வீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இதன்போது, முன்பள்ளி கலைத்திட்டத்தை மட்டும்மாற்றுவதால்என்னபயன்?, இன்றைய விலை வாசியில் 6000 ரூபா போதுமனதா?, உழைப்புக்கான ஊதியமும் கௌரவமும் வழங்கப்பட வேண்டும், கல்விப் பயணத்தின் முதற்படியான ஆசிரியர்களை முழுமையாக்குங்கள என எழுதப்பட்ட சுலோக அட்டைகளையும் போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்தனர்.



முன்பள்ளி ஆசிரியர்களாகப் பல வருடங்களாக நாம் பணியாற்றுகின்ற போதும், உதவித் தொகையான வெறும் 6,000 ரூபா மட்டுமே எமக்குக் கிடைக்கின்றது. தற்போதைய பொருள்களின் விலையேற்றத்துக்கு மத்தியில் இந்த 6,000 ரூபா பணத்தை வைத்து நாம் எவ்வாறு குடும்ப சீவியத்தைக் கொண்டு நடத்த முடியும்? பெண் தலைமைத் துவக் குடும்பங்கள், போரால் பாதிக் கப்பட்ட பெண்கள் எனப் பலரும் சேவை நோக்கத்தோடு பணியாற்றி வருகின்றோம். எனினும், எம்மால் தொடர்ந்தும் அவ்வாறு செயற்பட முடியாது. எமது குடும்பங்கள் பட்டினியால் இறக்கும் நிலைவரும். எனவே, எமக்கான சம்பளத்தை அதிகரித்து வழங்குமாறு நாம் இந்த அரசிடம் கோருகின்றோம். ஒவ்வொரு அரசியல்வாதிகளும் வாக்குறுதிகளை மட்டுமே தருகின்றார்கள். எமக்குத் தீர்வு இன்னமும் கிடைக்கவில்லை எனவும் போராட்டத்தில் ஈடுபட்ட முன்பள்ளி ஆசிரியர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்டவர்களைச் சந்தித்த வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, முன்பள்ளி ஆசிரியர்களின் கோரிக்கை தொடர்பான மகஜரைப் பெற்றுக் கொண்டமையுடன், ஒரு வாரத்துக்குள் தீர்க்கமான முடிவைப் பெற்றுத் தருகிறேன் என உறுதியளித்தார். இதையடுத்துப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது. (100)

## மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவர் சிக்கினார்

நுவரெலியா, பெப்.22

நுவரெலியா, பொகவந்தலாவைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மொராவத்த பிரதேசத்தில் சட்டவிரோதமாக மாணிக்கக்கல் அகழ்வில் ஈடுபட்ட ஒருவரைப் பொகவந்தலாவைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொகவந்தலாவைப் பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது நபரே நேற்றுமுன்தினம் இவ்வாறு கைதுசெய் யப்பட்டுள்ளார்

இதன்போது மாணிக்கக்கல் அகழ்வுக்காகப் பயன்படுத்திய பொருள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற் கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வெளிநாட்டுத் துப்பாக்கியுடனும் தோட்டாக்களுடன் ஒருவர் கைது

மாத்தளை, இரத்தோட்டைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பர கிரிஎல்ல பிரதேசத்தில் ஓட்டோ ஒன்றில் வெளிநாட்டுத் துப்பாக்கியைக் கொண்டு சென்ற நபர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய் துள்ளனர்.

இரத்தோட்டை பிரதேசத் தைச் சேர்ந்த 37 வயது நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு 'தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின்போதே குறித்த நபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இதன்போது வெளிநாட்டுத் துப்பாக்கி ஒன்றும், 12 தோட்டக்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. இவற்றைக் கொண்டு செல்வதற்குப் பயன்படுத்தப்பட்ட ஓட்டோவும் இரத்தோட்டைப் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இது தொடர்பில், இரத்தோட்டைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

---

## யாழில் இருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வாகனத்தில் பெண் உள்ளிட்ட 13 பேர் இருந்த நிலையில் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவுப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது.

தகவலின் பிரகாரம் சம்பவ இடத்துக்கு வருகை தந்த பொலிஸாரிடம் வாகனத்துடன் அதில் இருந்த 13 பேரையும் ஊரவர்கள் ஒப்படைத்தனர்.

தனிப்பட்ட பகை காரணமாகவே யாழில் இருந்து வாகனத்தில் முல்லைத் தீவு சென்று தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது எனப் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

---

## 16 ஆயிரத்தைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி நாட்டில் இதுவரையில் கொரோனாத்தொற்றால்மரணித்தோரின் மொத்த எண்ணிக்கை 16 ஆயிரத்து 24 ஆக அதிகரித்துள்ளது.

## தூத்துக்குடியூடாக இலங்கைக்கு

# 10 கிலோ ஐஸ் போதைப்பொருளை கடத்த முயன்ற 7 பேர் மாட்டினார்கள்



(ந.லோகதயாளன்)

தூத்துக்குடியூடாக இலங்கைக்குக் கடத்தப்பட விருந்த 10 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருள் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளது.

இலங்கைக்குப் படகு மூலம் போதைப் பொருள் கடத்தப்படவுள்ளதாகக் கிடைத்த தகவலின் பெயரில் தமிழகப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போதே படகில் ஏற்றி எடுத்துச் செல்லப்பட்ட 10 கிலோ ஐஸ் போதைப் பொருள் கடலில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

இதன்போது ஐஸ் போதைப்பொருளைக் கடத்த முயன்ற படகில் இருந்த 7 பேரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட ஐஸ் போதைப் பொருளின் பெறுமதி இலங்கை நாணயத்தில் சுமார் 10 கோடி ரூபா எனத் தெரிவிக்கப்ப டுகின்றது.

தூத்துக்குடி கியூப் பிரிவு பொலிஸாரே இவற்றைக் கைப்பற்றியதோடு சந்தேக நபர்களையும் கைதுசெய்துள்ளனர் என்று தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# கமல் லியனாராச்சி காலமானார்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவரும் சிரேஷ்ட ஊடகவியலாளருமான கமல் லியனாராச்சி நேற்றுமுன்தினம் காலமானார்.

சிரேஷ்ட ஊடகவியலாளரான கமல் லியனாராச்சி இலங்கை இதழியல் கல்லூரியின் விரிவுரையாளராகவும் பணியாற்றியிருந்த நிலையில் நேற்றுமுன்தினம் சுகவீனம் காரணமாக காலமானார்.

கமல் லியனாராச்சி முன்னர் 'லக்பிம' நாளிதழில் சிரேஷ்ட ஊடகவியலாளராகப் பணியாற்றியிருந்தார்.

தொடர்ந்து இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் பிரதித் தலைவராகப் பணியாற்றி வந்த நிலையில் காலமானார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# சலுகைகளுக்காக மக்களை காட்டிக்கொடுக்கும் அமைச்சர்களே மலையகத்தில் இருக்கின்றார்கள்

## திகாம்பரம் எம்.பி. திட்டவட்டம்



சலுகைகளுக்காக மக்களைக் காட்டிக்கொடுக்கும் அமைச்சர்களே மலையகத்தில் இருக்கின்றனர். அதனால்தான் அரச ஊழியர்களுக்கு 5 ஆயிரம் ரூபா வழங்கப்படும் நிலையில், தோட்டத் தொழிலாளர்களுக்கு கோதுமை மா வழங்கப்படுகின்றது. இப்படியான அரசியல்வாதிகளுக்கு மக்கள் தக்க பாடம் புகட்டுவார்கள் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

பத்தனை – போகாவத்தையில் உள்ள கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு கூட்டத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின் போது தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.உதயகுமார் உட்பட பிரதேச சபை உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பொருள்களின் விலைகள் உச்சம் தொட்டுள்ளன. இதனால் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அரச ஊழியர்களுக்கு ஐந்தாயிரம் ரூபா வழங்கப்படும் நிலையில், தோட்டத்தொழிலாளர்களுக்கு அற்ப தொகையில் கோதுமை மா வழங்கப்படுகின்றது. இது பெரும் அநீதியாகும். எமது மக்களை சிறுமைப்படுத்தும் செயலாகும்.

50 வருடங்களாக அரசியல் செய்வதாக மார்தட்டிக் கொள்கின்றனர். ஆனால், நல்லாட்சியின்போது அந்த நான்கரை வருடங்களில் தான் மலையகத்தில் மாற்றம் ஏற்பட்டது. கிராமங்கள் உருவாக்கப்பட்டன. காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன. அதனைக் காட்போட் என சின்னப் பையன் ஒருவர் விமர்சிக்கின்றார். அது பொய், அந்த உறுதிப்பத்திரத்தை வங்கியில் அடகு வைத்து, கடன் பெறலாம்.

எமது மக்களை ஏமாற்றி, அவர்களைக் காட்டிக் கொடுத்தே இவர்கள் செயற்படுகின்றனர். நாங்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கினால் தொழிலாளர்களை வேலைக்கு அனுப்புகின்றனர். இப்படியான காட்டிக்கொடுப்பாளர்களுக்கு மக்கள் தக்க பதிலை வழங்குவார்கள்.

தோட்ட மக்களின் வாழ்க்கை முறை தெரிந்த ஒருவரால் தான் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். நான் உங்களில் ஒருவன். எனவே, பெருந்தோட்டத் தொழிலாளர்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக்குவதே எமது இலக்கு. அந்த இலக்கை சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஆட்சியில் நிச்சயம் அடைவோம். – என்றார்.

# யுத்த காலத்தின் போது வடபகுதிக்கான உதவிகளை திட்டமிட்டு அரசு தடுத்ததா?

## சரத் வீரசேகர பதில்

யுத்தத்தின்போது தாங்கள் திட்டமிட்டு வடபகுதிக்கான உதவிப்பொருள்களை தடுத்தோம் என முன்வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தவறானது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வு பெப்ரவரி 28 ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகவுள்ள நிலையில், ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் இலங்கை தொடர்பான விசாரணை அறிக்கையிலிருந்தே ஆரம்பமாகின என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த அறிக்கை தங்களுக்கு எதிராக 8 யுத்தக் குற்றங்களில் ஈடுபட்ட குற்றச்சாட்டுகளை முன்வைத்தது என்றும் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களை மீறியமை தொடர்பாக நான்கு குற்றச்சாட்டுகளும் சர்வதேச மனித உரிமை சட்டங்களை மீறியமை தொடர்பாக நான்கு குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தான் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்குத் தனியாகச் சென்று அந்த குற்றச்சாட்டுகளை நிராகரித்தேன் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உதாரணத்துக்கு யுத்தத்தின் போது தாங்கள் திட்டமிட்டு வடபகுதிக்கான உதவிப்பொருள்களைத் தடுத்தோம் என முன் வைக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு தவறானது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தான் அவ்வேளை கடற்படையிலிருந்தார் எனவும்



வடபகுதிக்கு உதவிப்பொருள்களுடன் நூற்றுக்கணக்கான கப்பல்கள் சென்றன என்றும் ஐ.நா. உட்பட சர்வதேச சமூகம் இலங்கையை இதற்காகப் பாராட்டின என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு, முல்லைத்தீவு அரசாங்க அதிபராகயிருந்த, இமெல்டா சுகுமார் ஒருமுறை மூன்று மாதங்களுக்கு அவசியமான உணவுப்பொருள்கள் இருக்கின்றன எனத் தெரிவித்த போதிலும் மங்கள சமரவீர யுத்த குற்றச்சாட்டுகளை ஏற்றுக்கொண்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் பரணகம ஆணைக்குழுவுடன் ஆறு சர்வதேச அளவில் பெயர் பெற்ற யுத்த குற்ற நிபுணர்கள் இணைந்து, தாங்கள் எந்த யுத்த குற்றங்களையும் இழைக்கவில்லை என உறுதியாகத் தெரிவித்தனர் என்றும் அப்படியான சூழ்நிலையில் ஏன் சில நாடுகள் எங்கள் யுத்த வெற்றி வீரர்களை ஏற்றுக்கொள்ள மறுக்கின்றன எனவும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.

# அரசாங்க திணைக்களங்களின் நடமாடும் சேவை வவுனியாவில்!

*வடக்கு மாகாண அரச திணைகளங்களின் பங்குபற்றுதலுடனான நடமாடும் சேவை வவுனியா பரகும் மகாவித்தியாலத்தில் நேற்று (திங்கட்கிழமை) இடம்பெற்றது.*

*குறித்த நடமாடும் சேவையை வட மாகாண பிரதம செயலாளர் சமன் பந்துல சேனவால் ஆரம்பித்து வைக்கப்பட்டதுடன் இந்தச் சேவைகள் தொடர்பாகவும் அவர் பார்வையிட்டிருந்தார்.*

*வவுனியா தெற்கு பிரதேசசபைக்கான இந்த நடமாடும் சேவை காலை 10 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை இடம்பெற்றது.*

*இதேவேளை பொதுமக்கள் தாங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு பெறும் நோக்குடன் அதிகளவில் மக்கள் கலந்து கொண்டமையுடன், தங்களின் நீண்ட கால பிரச்சினைகளுக்கான தீர்வைப் பெற்றுச்சென்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.*

*வடக்கு மாகண பிரதமசெயலாளர் சமன் பந்துலசேன மற்றும் வடமாகாண அரச திணைக்களங்களின் தலைவர்கள், கலந்துகொண்டிருந்தமையுடன் 25 அரச திணைக்களங்கள் இந்த நடமாடும் சேவையின் ஊடாகத் தங்கள் சேவையைப் பொதுமக்களுக்கு வழங்கியமை குறிப்பிடத்தக்கது.*

# காலம் நிறைவடைந்துவிட்டது அரசை நம்பியிருப்பது வீண்!

## என்கின்றது எதிர்க்கட்சி

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் காலம் நிறைவடைந்துள்ளது என்றும் அரசாங்கம் இனியும் அதன் உதவியை நம்பியிருக்க முடியாது ஐக்கிய மக்கள்சக்தி தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா இவ்வாறு கூறினார்.

அதேநேரம் எரிபொருள் நெருக்கடி எரிசக்தி நெருக்கடியாக அதிகரித்து அதன் மூலம் நாட்டின் வங்கி முறைமையின் ஸ்திரத்தன்மைக்குப் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என அவர் குற்றம் சாட்டினார்.

மேற்படி நிதி நெருக்கடியை உள்நாட்டு செயற்பாட்டின் மூலமோ அல்லது வெளிநாட்டவர்கள் இலங்கைக்கு வந்து ஹோட்டலில் தங்குவதற்குப் பணம்



செலவழிப்பதன் மூலமோ தீர்க்க முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் சர்வதேச நாணய நிதியத்தின் விதிகளுக்குப் பொதுமக்கள் உடன்பட்டால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுவதாக அரசாங்கம் தெரிவித்த கருத்துத் தொடர்பாகவும் இதன் போது கேள்வியெழுப்பிட்டது.

இதற்குப் பதிலளித்த ஹர்ஷ டி சில்வா, சர்வதேச நாணய நிதியம் எப்போதாவது அத்தகைய சட்டங்களை விதித்துள்ளது என்பதை நிரூபித்துக் காட்ட முடியுமா என்றும் அரசாங்கத்துக்கு அவர் சவால் விடுத்தார்.

# ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக:

## தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலானவையே இன்னமும் வெளிப்படுத்தப்படாமல் இருக்கின்றன

### நீதி அமைச்சர் அலி சப்றி தெரிவிப்பு

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான சாட்சியங்கள் மறைக்கப்பட்டன என முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் ஆதாரமற்றவை என நீதியமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதான சந்தேக நபர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 26 பேருக்கு எதிராக சட்டமா அதிபரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக நீதி அமைச்சர் குறிப்பிட்டார்.

தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் எனக் கருதப்படும் விடயங்கள் மாத்திரமே வெளிப்படுத்தப்படாமல் உள்ளன என்றும்



அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த விடயங்கள் வெளிப்படுத்தப்படுவதற்கு முன்னர் அது தொடர்பாக ஆராயுமாறு ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கையிலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

எனவே, அதனை வெளியிடுவதா? இல்லையா என்ற இறுதி தீர்மானத்தை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே மேற்கொள்வார் என நீதியமைச்சர் அலி சப்றி தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.02.2022இல் வெளியிடப்பெற்றது.